வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.600 /ஆ1/2022 நாள் 31.03.2022

----

பொருள் : பள்ளிக் கல்வி - Quiz, EMIS, ITK மற்றும் OOSC சார்ந்து தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் சார்பு

----

வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பள்ளியில் செயல்படுத்த மற்றும் கடைப்பிடிக்க வேண்டியவைகள் சார்ந்து கீழ்காணும் அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

1. QUIZ (BASIC ASSESSMENT TEST)

தங்கள் பள்ளியில் பயிலும் 9, 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்காக நடைபெறும் BASIC ASSESSMENT TEST-ல் அனைத்து மாணவர்களையும் அவரவர்களுக்குரிய நாளில், உரிய நேரத்தில் பங்கு பெறச் செய்து 100% சதவீதம் அடைய தலைமையாசிரியர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எக்காரணத்தையும் முன் நிறுத்தாமல் இப்பணியை சிறப்புடன் செய்து முடிக்க அனைத்து வகை தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

HI-TECH LAB சார்ந்த பிரச்சனைகள் அல்லது தொழில்நுட்ப கோளாறுகள் ஏதேனும் இருப்பின் தங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள தொடர்புடைய தொழில்நுட்ப வல்லுநர்களின் தொலைப்பேசி எண்களுடன் தொடர்பு கொண்டு மேற்கூறிய பிரச்சனைகளை உடனுக்குடன் சரி செய்து QUIZ (BASIC ASSESSMENT TEST) முடிக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. தவறும்பட்சத்தில் பங்குபெறும் மாணவர்கள் சதவீதம் குறைவாக உள்ள பள்ளித் தலைமையாசிரியர்கள் தினமும் மாலை 06.00 மணி அளவில் காந்தி நகர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அலுவலகத்தில் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களை நேரில் சந்திக்க வேண்டும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

2. EMIS

அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் தினமும் காலை 09.45 மணிக்குள் தங்கள் பள்ளியில் வருகைப் புரிந்துள்ள ஆசிரியர்கள் மற்றும் அனைத்து வகுப்பு மாணவ / மாணவிகளின் வருகையை TN-EMIS APP - ல் பதிவு செய்ய வேண்டும்.

மேலும் பள்ளிச் சார்ந்த செயல்பாடுகள், பள்ளி இணை செயல்பாடுகளான (School Infrastructures, School Profile, Teachers' Profile, Students' Profile and Free Schemes Details) மற்றும் இதர விவரங்கள் ஆகியவற்றை உடனுக்குடன் EMIS-ல் Update செய்ய வேண்டும் என்றும், Update செய்த பின்பு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதா என உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3. ITK (இல்லம் தேடி கல்வி)

6 முதல் 8ஆம் வகுப்பு வரை தங்கள் பள்ளியில் பயிலும் மாணவ / மாணவிகள், அவர்களின் இருப்பிடத்திற்கு அருகாமையில் உள்ள அல்லது படிக்கும் பள்ளிக்கு அருகாமையில் உள்ள (Habitation) இல்லம் தேடி கல்வி மையத்தில் சேர்ந்துள்ள விவரங்களை அப்பள்ளியின் தலைமையாசிரியர் சேகரித்து, தொகுத்து வைத்துக் கொள்ள வேண்டும். மேலும், மாணவர்கள் எவரேனும் சேராமல் அல்லது சேர இருக்கும்பட்சத்தில் அவரவர்களுடைய இருப்பிடத்திற்கு அருகாமையில் உள்ள இல்லம் தேடி கல்வி மையத்தில் சேர்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், தங்கள் பள்ளி அமைந்திருக்கும் இடத்திற்கு உட்பட்ட இல்லம் தேடி கல்வி மையங்களை அவ்வப்போது பார்வையிட்டு, பார்வை செய்த அறிக்கையை ஒன்று சேர்த்து முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் சமர்ப்பிக்க ஏதுவாக தயார் நிலையில் வைத்திருக்குமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

4. Oosc (OUT OF SCHOOL CHILDREN) பள்ளி செல்லாக் குழந்தைகள்.

பள்ளியில் பயிலும் மாணாக்கர்களின் இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், PTA உறுப்பினர்கள், SMC உறுப்பினர்கள், பெற்றோர்கள் மற்றும் உள்ளூர் பிரதிநிதிகள் ஆகியோர்களுடன் கூட்டம் நடத்தி மாணவர்கள் பள்ளிக்கு வராமைக்கான காரணங்களை கண்டறிந்து, பள்ளிக்கு வராத மாணவர்களையும், அவர்களது பெற்றோர்களையும் சந்தித்து அல்லது வரவழைத்து உரிய ஆலோசனைகள் வழங்கி, அம்மாணவர்களை பள்ளியில் சேர்க்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பெறுநர்
அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்கள்
வே.மா

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர் மாவட்டம்.